# வாழ்க்கையில் ஏற்படும் முக்கிய சந்தேகங்களும் தீர்வுகளும்!

உ

தாத்து துணை

**1. இவன் பாவி, இவன் புண்ணியம் செய்தவன் என்று பொதுவாக மனிதர்கள் மத்தியில் உலவுகின்ற ஒன்று. நிஜமான பாவம் என்பது எப்படி, நிஜமான புண்ணியம் என்பது எப்படி இதைப்பற்றி சித்தாந்தம் என்ன கூறுகிறது?**

நாம் வாழுகின்ற வாழ்க்கையின் முக்கிய பாங்கு முக்கிய தத்துவம் என்ன? நாம் அன்றாடம் உழைக்க வேண்டும், ஏதாவது ஒரு வேலையை செய்துகொண்டே இருக்க வேண்டும். அது எதற்காக? பசியில்லாமல் சாப்பிடுவதற்காக. நாம், நம் சந்ததியர்கள், குழந்தைகள் என்று இருக்கும் அத்துணை பேருக்கும். சாப்பிடுவதற்காக நாம் ஆகாரத்திற்கு மட்டுமில்லாமல், அனைவரும் நம்மைச் சார்ந்தவர்களின் மானத்தைக் காப்பாற்ற ஆடையும், பசியைப் போக்க ஆகாரமும், இருப்பதற்கு வீடும், நம்முடைய குழந்தைகள் முதலியவர்களை சௌகரியப்படுத்துவதற்கும் செய்கின்றோம். அதுபோல எந்த இடத்திற்கு நீ போனாலும், சௌகரியமாக இருக்கவும், செய்யவேண்டும். அதுதான் தர்மம்.

சில பேருக்கு பிழைப்பதற்கே கடினம். எவ்வளவு உழைத்தாலும் பற்றாக்குறை, வயிற்றுப் பாட்டுக்கே கஷ்டப்படும் பொழுது இதில் தர்மம் எப்படிச் செய்ய முடியும் என்ற சந்தேகம் இருக்கலாம். அப்படிச் சொல்பவர்கள் வீண்பேச்சு பேசுவ தில்லையா, பரிகாசம் செய்வதில்லையா. அப்படிச் செய்து

சந்தோஷம் அடையும் காலம் வீணானது இல்லையா? அப்படிப்பட்டவர்கள் பணம் சம்பாதிக்கும் காலத்தைத் தவிர வீணான செய்கையில் இல்லாமல் ஆன்ம, ஆத்ம லாபமான காரியத்தைச் செய்யலாம் இல்லையா. இதற்கு என்ன தேவை? மனம் தேவை. உதாரணத்திற்கு, இப்படிப்பட்டவர்கள் சினிமா, பொழுதுபோக்கு என்று நேரம் ஒதுக்காமல் இருப்பார்களா? சிந்தித்துப் பாருங்கள். அப்படி இல்லாமல் தினமும் அந்த நேரத்தில் சிறிது நேரமாவது நாமசங்கீர்த்தனம் என்னும் இறைவனைப் பற்றி ஜபித்து வரலாம் இல்லையா? அப்பொழுது நீங்கள் சம்பாதிக்கும் 10 ரூபாய் ஆக இருந்தால் கூட ஒரு ரூபாய் தர்மத்திற்காகச் செலவிடலாம் இல்லையா. யோசித்துப் பாருங்கள்.

அப்படி தர்மம் செய்யாமல் நீ உன் சுயநலம் கொண்டு உனக்கு என்று சேமிப்பதினால் நீ இறக்கும்பொழுது உன்னுடையது ஆகாது. அது நீ வாழும் உலகத்தே முடிந்துவிடும். ஆனால், தர்மம் என்று ஒன்று நீ செய்தால் எவ்வுலகத்துக்கும் அது உனக்குத் துணை நிற்கும். சிந்தித்துப் பாருங்கள். அப்படி தர்மமும் செய்து, இறைவனின் நாமஜபம் செய்யும்பொழுது உன் பாவங்கள் தீர்ந்து புண்யப் பேறு சொர்க்கத்தில் நிச்சயம் என்பதை உணர்வீராக. இதைவிட்டு என்னால் முடியவில்லை, நேரம் இல்லை என்பதே நீ சொல்லும் பொய் என்பது சித்தர்கள் கண்ணோட்டம்.

பாவம் என்பது நாம் உடலாலும், மனதாலும், வாயாலும், பணத்தாலும் செய்யும் செயலே. பாவம் என்பதில் முக்கியத்துவம் 1. முதலில் உடலால் செய்யும் பாவம். அந்த உடலை வைத்துக் கொண்டு கெட்ட காரியங்கள் செய்வது காமம், உடலை வைத்துக் கொண்டு அடுத்தவரை துன்புறுத்துவது போன்று பல்வேறு செயல்கள் இருக்கிறது இல்லையா. 2. இரண்டாவது, மனதால் செய்யும் பாவம்– மனசாட்சி இல்லாமல் எத்தனையோ பேர்களை மனிதன் தன் மனம் என்ற ஆயுதத்தை வைத்து எத்தனையோ

வித துன்பங்கள் என்னும் ஈட்டி கொண்டு அடுத்தவர்களைத் துன்புறுத்துகிறான். அவஸ்தைப்படுத்துகிறான். அதனால் எவ்வளவோபேர் வாழ்க்கை அழிந்து இருக்கிறது. அது மிகப் பெரிய பாவம். 3. ஒருவரைப் பற்றி தெரியாமல், யோசிக்காமல், எவனோ ஒருவன் புறம் சொல்லும் பொருட்டு அதனைக் கேட்டு அந்த ஒருவரைப் பற்றி அவதூறு பேசி அவன் பெயரைக் கெடுத்து அதற்கென்று ஒரு கூட்டம் கூடி ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு வாய் இல்லாமல் பல வாய் உருவாகி, அந்த ஒருவர் உண்மையானவர், அவரைத் துன்புறுத்தி சந்தோஷப்படுவது பாவத்திலும் பெரும் பாவம். 4. பணத்தால் செய்கின்ற பாவம். பணத்தை வைத்துக்கொண்டு எத்தனை விதமான தவறுகள் மனிதன் செய்கிறான். பலம் இல்லாத ஒருவனை பணம் படைத்தவனுக்கு ஆகவில்லை என்றால் அவனை அந்தப் பணத்தைக் கொண்டு எப்படி துன்புறுத்துகின்றான். அதேபோல், அந்தப் பணம் படைத்தவனுக்கு சுயநலம் பொருட்டே எல்லா நற்செயல்களும் இருக்கும். தெரிந்த தவறு, தெரியாத தவறு எத்தனையோ பணத்தால் மனிதன் செய்கிறான் அதுவும் மிகப்பெரிய பாவம்தான்.

ஆக, உடலாலும், மனதாலும், வாயாலும், பணத்தாலும் இந்த நான்கு வகைகளில் செய்கின்ற பாவம், உதாரணம், உடலால் காமுகன், இச்சையில் தவறான பாவம் செய்கின்றான். இதற்கு இணையானது குரோதம். காமத்தில் தவறு நிகழாத பட்சம் அவன் குரோதத்தில் தள்ளப்பட்டு பலவித பாவங்கள் செய்து அவனே துன்புறுத்திக் கொள்கிறான். காமம் என்ற பந்து சுவரில் பட்டு மீண்டும் குரோதமாகத் திரும்பி வருகிறது. அதைப்போல,

ஒரு நெருப்பில், அதற்கு உண்டான ஆகாரத்தைப் போட்டால், மேலும் அது பெரும் தீயாக எரியும். போடும் ஆகாரம் வாங்கிக்கொண்டே தீ மட்டும் பிரகாசமாக எரிவதைப் போல காமமும், குரோதமும் இருக்கும். குரோதம் பணத்தாலும், உடலாலும், மனதாலும், வாயாலும்தான் வரும். காமமும் அதைப்

போலத் தான். அதனால்தான் இன்று நிறைய தவறுகள் காமத்தையும், குரோதத்தையும் தழுவியே இருக்கிறது என்பதை உணர்ந்து பாருங்கள். பணம் சம்பாதித்து செலவு செய்கின்றோம். எதற்காக? இந்த சரீரம் பலம் பெற்று சௌகரியத்தை அனுபவிப்பதற்காகத் தானே! அப்படிப்பட்ட அந்த உடல் மடிந்து போனால் எந்தப் பண வரவும் இல்லை, எந்தச் செலவும் இல்லை. ஆனால் உடல் மடிந்தாலும், நீ புண்ணியம் என்னும் தர்மத்தைச் சேர்த்து சம்பாதித்து வைத்துக்கொண்டால் அந்த வரவு ஏழு உலகுக்கு நீ போனாலும், நீ இருந்து நல்ல செலவுகள் செய்வதற்கு அர்த்தமாகவும் இருக்கும், இறந்த பின்பும் வாழ்வதாக இருக்கும்.

சரி, பாவம் செய்துவிட்டோமே என்று வருந்தாதே! ஏன் தெரியுமா? பல பக்திமான்கள் பாவம் செய்து உணர்ந்து நல்ல இறைநெறி கொண்டவர்களாக மாறியிருக்கிறார்கள். நீ ஒன்றை நன்றாக யோசி. உன் மனம் வேண்டாம் என்று உணர்த்துகின்ற போதும் நீ அதைச் செய்கிறாய். மீண்டும் மீண்டும் மனம் இது தவறு என்று சொன்னாலும் நீ செய்துகொண்டுதான் இருப்பாய். ஏன் தெரியுமா? பல காலம் அப்படியே பழகிவிட்டது. அதுதான் காரணம். அதை எப்படி விரட்டுவது என்றால் எந்த வழியில் மனசு செயல்படுத்துகின்றதோ அதே வழியில்தான் நாம் அதனைச் செய்தாக வேண்டும். அப்படி நீ யோசிக்கும்பொழுது உனக்கு வேதனை வரும், அழுகை வரும். யோசனை மிகவும் துன்புறுத்தும். நீ வேதனைப் படாதே. உன்னைவிட பாவம் செய்தவர்களைக் கூட ரட்சிக்கின்றான் அந்த கருணைக் கடவுள் ஈசன். அதனால் நீ உன்னை தைரியப்படுத்திக்கொள். உதாரணக் கதை ஒன்று. பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசிக்கின்றார். என்னவென்றால் உலகத்தில் எல்லா மனிதர்களும் மகாபாவியானாலும் அந்தப் பாவம் என்னும் சமுத்திரத்தில் ஞானம் என்கின்ற படகைக் கொண்டு நீ பாவம் என்ற சமுத்திரத்தைத் தாண்டிவிடுவாய் என்று பகவான் சொல்லி இருக்கிறார் என்பதை உணர்ந்து பாவம் செய்கிறவர்கள்

கவலையை விடுங்கள். ஞானம் என்ற பிரகாச ஒளி, உன் மீது பட்டால்தான் உன்னிடம் இருக்கும் பாவத்தின் நிழல் உன் பின்னால் இருக்கும். அந்த ஞானப் பிரகாச ஒளி உன் மீது படவில்லை என்றால் அந்தப் பாவ நிழல் உனக்குள்ளே அடங்கி இருக்கும். அதுபோல அந்த பாவ நிழல் உன்னைத் தொடராது இருக்க ஞானிகளை பற்றி நாமசங்கீர்த்தனம் செய்து, யோக நிஷ்டையைத் தெரிந்துகொண்டு ஞான வழி தேடு. இதற்கும் உனக்கு கொஞ்ச நேரம்கூட இல்லையே? என்ன செய்வது என்று பொய் சொன்னால், தர்மத்தைச் செய், புண்ணியத்தை நாடு. அது இருக்கட்டும், என்றும் உன்னோடு இறை வேதம் சொல்வது எப்படித் தெரியுமா? பாவத்தை தர்மத்தால் ஜெயித்து விடலாம் என்று சொல்லுகிறது.

இப்பொழுது தர்மம் என்றால் என்ன என்பதை அறிவோம்? தர்மம் என்றால், அதர்மத்திற்கு நேர் எதிரி, அதுபோல் கெடுதலுக்கு நேர் விரோதி. நல்லது அதுதான் தர்மம். கெடுதல் தான் நம்மை பாவம் பண்ணத் தூண்டுகிறது. ஒரு காரியத்தில் ஆசைப்பட்டு பண்ணுகிறதே பாவம். அந்த ஆசைதான் நம்மை பாவம் செய்யத் தூண்டுகிறது. எளிமையாகப் புரிந்துகொள்ள பாவம் என்பது என்ன? புண்ணியம் என்பது என்ன? எதை நாம் செய்யக் கூடாது என்று மனதிற்கு தோன்றுகின்றதோ அது பாவம். எதைச் செய்தால் நன்று என்று மனதிற்கு தோன்றுகின்றதோ அதுவே புண்ணியம். புண்ணிய பலனையே நீ அதிகம் நாட வேண்டும். அதனை கற்றுக்கொள்ள தெரிந்த பக்திமான், புண்ணியவானை தேடவேண்டும்.

அப்படி நீ தேடி புண்ணியத்தை தெரிந்து செய்ய ஆரம்பிப்பதே ஆனந்தம். பரம ஆனந்தம். ஒரு சிலருக்கு புண்ணியம் நாடுகின்றதும் ஆசைதானே என்று கேள்வி எழலாம். நண்பா! புண்ணியத்தின் மீது ஆசை, பெரும்பாலும் பாவத்தில் இருந்து உன்னை காப்பாற்றிவிடும். ஆனால் நண்பா! பாவம் செய்யும் பொழுது சுறுசுறுப்பும், வேகமும் உன்னிடம்

காணப்படும். ஆனால் புண்ணியம் செய்ய உன் மனம் சோம்பேறியாகிவிடும். இதுதான் உண்மை என்பதை உணர்ந்துகொள் நண்பா! இதையும் புரியாமல் மிக புத்திசாலி ஒருவர், படைத்த இறைவன்தானே எல்லாவற்றிற்கும் காரணம், அப்படி இருக்க பாவம் செய்ய தூண்டுவதும் இறைவன் செயல்தானே என்று கேட்கின்றார்? ஐயா! இதற்கு தான் அர்ஜுனன் பகவான் இடத்தில் பகவானே! மனிதன் பாவம் செய்கின்றான். அதை அவன் தெரிந்தோ ஆசைபட்டோ செய்யவில்லை. அப்பொழுது அவனை பாவம் செய்யவைப்பது யார்? அவனை துன்பப்படுத்தி பாவம் செய்ய தூண்டுவது யார்? பாவம் செய்யவேண்டாம் என்று இச்சை இல்லாமல் ஒருவன் இருந்தாலும் அவனையும் பாவம் செய்ய வைப்பது யார் என்று கேட்டான் அர்ஜுனன். அதற்கு பகவான் 'அர்ஜுனா முன்பு நான் சொன்ன நான்கிலும் மனிதன் பாவம் செய்கின்றான். மனம், வாக்கு, உடம்பு, பணம் என்பதைக் கொண்டு அந்த நான்கைக் கொண்டு? நல்லதைச் செய்தால் அதுவே புண்ணியம். கயிற்றைக் கட்டி மாட்டை பூட்டிவைத்தால் பால் கரந்து பிழைக்கலாம். அதே கயிற்றை அவிழ்த்தால்தானே ஆகாரம் உண்டு மாடு பால் தரும். கட்டவைத்தவனும் அவனே, அவிழ்க்கவைப்பதும் அவனே. இந்த இரண்டும் கற்று தானே மனிதன் சிருஷ்டி ஆகிறான். பாவத்திற்குள் இரண்டு குணம் உண்டு. அது மனிதனுக்கு தெரிந்தே பாவம் செய்கின்றான். எப்படித் தெரியுமா? குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்ட ஒருவன் இன்று குடிக்கிறான். அவன் மனது அதோடு நிற்காது. நாளையும் குடிக்க வேண்டும் என்று இன்றே நினைக்கிறான் இல்லையா? அன்றைக்கு செய்யும் தவறு ஒன்று, நாளை செய்யவேண்டும் என்ற சிந்தனை தவறு ஒன்று. ஆக இரண்டுமே உனக்குள் இருப்பதுதானே. இறைவனைப் பற்றி ஞானத்தைத் தெரிந்து யோகத்தை பழகி ஈஸ்வர பக்தி கொண்டு நல்லவரிடம் பழக்கம் வைத்து உன் அறிவை உணர்ந்தால் யாரும் பாவம் செய்ய தூண்டவில்லை.

நீயேதான் காரணம் என்று உணர்வாய்! என்று பகவான் சொன்னாராம்.

உதாரணத்திற்கு, உன் இதயம் யாருடைய இடம். அது எப்படிப்பட்ட புனித ஸ்தலம். அந்த இடத்தில் யார் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து அதனை சுத்தப்படுத்தி இறைவனை அமரவைத்து வணங்கி வழிபட என்ன செய்ய வேண்டும், என்ன வழி என்று யோசித்து தியானம் செய்ய வேண்டும். எது நடந்தாலும், இல்லை என்றாலும் தியானம் செய்ய வேண்டும். இது அவசியம். அப்பொழுதுதான் உனக்கு ஈஸ்வர அனுக்ரஹம் உண்டாகும். அது பிறவிப் பயனுக்கும் மேலானது ஆகும். பணம் சம்பாதிக்க எவ்வளவோ காலம் உழைக்கிறோம். தியானத்திற்கு 1/2 மணி நேரமாவது அமர்ந்து செய்வது தர்ம பணத்தை சேர்க்கும் காலமாகும். மனம் தியானத்தில் ஈடுபட்டு விட்டால் மனதால், வாயால், உடலால், பணத்தால் அடுத்தவரை புறம் பேசி இவற்றால் துன்புறுத்தி, தானும் துன்புறமாட்டான். பக்தனே! உன் உடம்பால் அடுத்தவனை உபயோகப்படும்படி உடம்பை வளர்த்துக் கொள். உன் மனதால் யாரையும் துன்புறுத்தாமல் இச்சைகொண்டு புண்ணியத்தை நாடு. உன் வாயால் நல்லவை பேசி நல்லதை போதி. நல்லதே நடக்கும். உனக்கு வாய் இருக்கிறது என்பதனால் வாய்மையை கெடுக்காது இரு. உன் பணத்தால் நீ இருக்கும்வரை தான் ஆடுவாய். நீ இல்லாதுபோனால் உன் பிள்ளைகள் ஆடும். அவர்கள் போனால் யார் என்பதை தொடர்வதைவிட நீ இறந்து எங்கு போய் உன் ஆத்மா போற்றப்படுமோ அந்த புண்ணிய பணத்தை மட்டும் நாடு. அதை சேர்த்து வைத்துக்கொள். இதை உணர்ந்து வாழ். உன்னதம் கிடைக்கும். உண்மை பிறக்கும், உறுதி மேல், உறுதி கிட்டும். அந்த சிவபரம்பொருள் ஊருக்கு வழி கிடைக்கும். உன் உன்னதத்தால் உலகம் உள்ளவரை உன் மெய்ப் புகழ் நிலைக்கும். இப்பவும் புரியாதுபோனால் உனக்கு நல்ல குரு வேண்டும். தேடி, ஓடு.. ஜெய் குருவே சரணம்.

**1. ஞானம் தியானம் என்பதின் முழு விளக்கம் தெரிந்து கொள்ளுங்கள் சித்தாந்தத்தில்.**

ஞானம் –

ஞா – ஞாயிறு, ஞாயிறு என்றால் பிரகாசமான ஒளி.

ன – னயம் – னயம் என்றால் ஆகார தத்துவத்தை னயற்று நளினமாய், நரம்புகளை பலப்படுத்த அந்த பிரகாசம் உனக்குப் புருவ மத்தியில் தோன்றுவதை உணரலாம்.

ம் – ம் என்றால் பிரணவம், அகார, உகார, மகரத்தின் மூலப்பொருள் ஞாயிறு, பிரகாசத்தை னயற்று தவம் செய்ய, ம் என்ற ஞானம் கிடைக்கும். இதுவே ஞானம் என்பதன் தத்துவம்.

**2. தியானம் என்பதன் முழு விளக்க சித்தாந்தம்.**

தி – தி என்றால் அந்தகாரம் இருள் என்பது பொருள்.

யா – என்றால் யாப்பு இலக்கணத்தில் பலம்.

ன – ன என்றால் னயம் அதாவது தி என்ற இருள் அகல, யா என்ற பலம் பெற்று ஐந்து 6 ஆதார சகஸ்ர சக்கரத்தை அண்டி ஞான சித்தி பேறு பெற, ம் என்ற பிரணவ ஓம்காரம் சித்தியாகும்.

ம் – என்றால் ஓம்காரம்.

இதுவே தியானம்.

ஞானம் கிடைக்க தியானம் செய்திடுக!

**2. இப்பொழுது எல்லாம் மனிதர்களுக்கும் விரைவில் மரணம் ஏற்பட்டு விடுகிறது. அது ஏன்? அதேபோன்று இளம் வயதிலேயே வியாதிகள் வந்து அவஸ்தைப் படுகிறார்களே, இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

முதலில் மரணம் என்பதன் பொருள் என்ன என்பதைப் பற்றி ஒரு சித்தாந்தத் திறனாய்வு என்னவென்றால், மரணம் – மர + ணம், மர என்றால் ஒரு கட்டைக்கு ஒப்பாகும். அதாவது தண்ணீரில் மிதக்கும் ஓர் மரக் கட்டை போன்று. ணம் என்றால் மூச்சு பிராணனம் என்பதன் சுருக்கம் ஆகும். பிராணனம் அதாவது மூச்சு மனிதனுக்கு போனால், மரக்கட்டை போல் ஆகிவிடுவான். இதைத்தான் சிந்தித்து மரணம் என்று வைத்தார்கள். இந்த மரணம் மனிதர்களை பல வழிகளில் தாக்கி வரவழைக்கிறது. அந்த தாக்கம் என்பது அவரவர் மனதைப் பொறுத்து அவரவருக்கு ஏற்றபடி மரணம் சம்பவிக்கிறது. எப்படித் தெரியுமா? மனதை மனிதன் பெரும் பாசம் மாயையில் முழுகடித்து விடுகிறான். உதாரணத்திற்கு எதிலும் போதும் என்று சிந்திப்பதில்லை, சிந்தித்தாலும் அதன்படி நடப்பதில்லை. அதுவே வாழ்க்கையில் எல்லாவற்றிலும் மனிதனுக்கு பிரச்சனை ஆகிவிடுகிறது.

நல்லவை எல்லாம் கொஞ்சமாகவும், தீயவை எல்லாம் அதிகமாகவும் மனிதன் நேசிக்கின்றான். அப்படி மாயைக்குள் அடங்கிய மனம் மரணத்தை எப்படி சீக்கிரம் வரவழைத்துக் கொடுக்கிறது என்று பாருங்கள். இப்பொழுது மனதுக்குள் இருக்கும் மாயை பேசுகிறது, சொல்கிறது கேளுங்கள். நன்றாக உற்றுக் கேளுங்கள். இதற்கு மனம் கேள்வி கேட்கிறதையும் பாருங்கள்.

## மனதும் மாயையும் பேசுகிறது

மாயை : ஏ மனிதா! நீ ஒரே சிந்தனை வைத்தால் வாழ்க்கையில் எப்படி முன்னேறுவாய்?

மனது : அப்பொழுது பலவித சிந்தனை செய்தால் எல்லாம் உருப்பட்டுவிடுமா?

மாயை : கலியுகத்தில் நல்ல சிந்தனையை குறைத்துவை. கெட்ட சிந்தனையை நிறைய வை என்று இரகசியமாகச் சொன்னதாம்.

மனது : அப்படி இருப்பது நல்லதா? குழப்பமாய் இருக்கே?

மாயை : குழம்பாதே நண்பா. சும்மா பொய்தானே அதனால் என்ன? உனக்கு ஆசை இருக்கு இல்லையா? அப்புறம் ஆசை எப்படி நிறைவேறும்?

மனது : தன் சுயநல ஆசைக்காக பொய் சொல்வது நல்லதா? தெரியவில்லையே!

மாயை : இதோ பார் உனக்கு திருமணம் ஆனபிறகு நீ உன் மனைவியிடம் மிகவும் சந்தோஷமாக இருக்கும் பொழுது உன் தாய்க்கும், மனைவிக்கும் சண்டை வரும். அப்ப என்ன செய்வாய்?

மனது : சமாதானப்படுத்தி இருவரையும் ஒற்றுமைப் படுத்துவேன்.

மாயை : அதெல்லாம் இப்ப நடக்காதுப்பா உனக்கு நிம்மதி போய்விடும் தெரியுமா?

மனது : அப்பாகிட்ட சொல்லி அம்மாவையும் புரிய வைப்பேன். பொண்டாட்டியையும் புரியவைப்பேன்.

மாயை : அப்பா சொல்லுவார் உங்களால் எங்கள் நிம்மதி போச்சு. நீங்கள் இருவரும் தனியாக சென்று விடுங்கள் என்பார். அப்போ என்ன செய்வீங்க?

மனது : தனிக் குடித்தனம் போகாமல் வாழ்ந்து காட்டுவேன்.

மாயை : அப்போ நீ மிகவும் நல்லவன். உன் கதி என்ன ஆகும் தெரியுமா? டைவர்ஸ், விவாகரத்துதான் தோழா! அதுதான் கலியுகம்.

மனது : குழப்பத்தில் என்ன செய்வது? குழந்தைகள் வேறு இருக்கிறதே. நிம்மதியே போச்சே!

மாயை : இதுக்குதான் சொன்னேன் நீ பொய் சொல்லி சமாளித்தால் ஓரளவுக்கு சுகப்பட்டு இருப்பாய் என்று.

மனது : மாதா பிதாவை எப்படி நான் வெறுப்பது. அவர்கள் முதல் தெய்வம். மனைவியும் பிள்ளைகளும் மிகவும் முக்கியம். என்ன செய்வது என்றே புரியவில்லையே.

மாயை : கவலைப்படாதே! நான் இப்ப ஒரு யோசனை சொல்கின்றேன். உனக்கு நிம்மதியாய் இருக்கும். கவலைகள் பறக்கும்.

மனது : அது என்ன, என்ன. சீக்கிரம் சொல்லு.

மாயை : "அது ஒன்றும் இல்லை. இரவில் கொஞ்சம் பீர் அடி. அப்புறம் பார்!" என்றதாம்.

மனது : ஐயோ எனக்கு பழக்கம் இல்லையே.

மாயை : என்னய்ய, பழகிக்க வேண்டியதுதானே. இந்தா கிளாஸ். புடி. அடி! இப்ப பார்.

மனது : ஏதோ சுமை தீர்ந்ததுபோல இருக்கே. ஐயோ வீட்டிக்குப் போனா மாட்டிக்குவேனே, அதுக்கொரு வழி சொல்லு.

மாயை : வாசனையான பாக்கு போடு. அவ்வளவுதான்.

மனது : கொஞ்ச நாள் கழித்து என்னப்பா இரண்டு பீர் குடித்தும் ஒன்றும் கவலை போகலையே. இதுக்கே வீட்டில் இன்னும் பிரச்சனையாக இருக்கே.

மாயை : நண்பா இப்பத்தான் வாழ்க்கையில் நீ மிகவும் முன்னேறி இருக்கிறாய். பீர விடு. பிராண்டி குடி.

ஒன்னுமில்ல. கொஞ்சம் கிளாஸ்ல போடு, தண்ணிய ஊத்து, மூக்கப் புடி. கப்புன்னு அடி நண்பா.

மனது : சூப்பர் ரொம்ப நல்லா இருக்கே. கவலையே இல்லை.

மாயை : இது இன்னா நண்பா கோட்டர போடு. அப்புறம் ஒரு மேட்டர சொல்லறேன்.

மனது : இன்னா மேட்டர் தோழா? ஒத்தி வைக்காம சீக்கிரம் சொல்லு என்றதாம்.

மாயை : வா, நடனம் பார். என்ன நடனம் என்று பார்க்காதே! அதுதான் அழகிகள் நடனம். அழகிகள் எல்லாம் உன்னை சந்தோஷப்படுத்துவார்கள் வா, வா.

மனது : ஏற்கனவே நான் குடிப்பதால் மனைவியிடமும், பெற்றவர்களிடமும், பிள்ளைகளிடமும் மிகவும் அவமானப்படுகின்றேன். இதுவேறவா?

மாயை : அடப்பாவி அதை வீட்டில் விடு. வீட்டில் உள்ள கவலை வீட்டோடு. வெளியில் வந்தால் படு ஜோரு என்றாக இருக்க வேண்டும்.

மனது : கொஞ்சம் சபலத்தில் நான் ஆட்டம் வேண்டு மானால் பார்க்கிறேன். தப்பு எதுவும் பண்ண மாட்டேன் என்றதாம்.

மாயை : முட்டாள் பார்த்தால் வேதனை தான் மிஞ்சும். கொஞ்சம் அனுபவித்து பாரு. வித்தியாசமாய் சுகமாய் இருக்கும் என்றதாம்.

மனது : மீண்டும் சபலப்பட்டு அப்படியா நிறைய பணம் செலவாகுமே எனக்கு வேண்டாம்ப்பா.

மாயை : முட்டாள் ஊரில் நீங்கள் எவ்வளவு பெரிய குடும்பம். உங்கப்பா மிகப்பெரிய புகழ்பெற்றவர். நீ பணம் கேட்டால் கடனாக எவ்வளவு பேர் கொடுப்பார்கள். அதை வாங்கி அனுபவி. பிறகு கொடுத்துவிடு.

மனது : இதுவும் நல்ல யோசனை என்று கடன் வாங்கி அந்த தவறான வழியில் சுகம் அனுபவிக்கத் தொடங்கியது.

மாயை : பல வருடம் கழித்து மனதை பார்த்து என்ன நண்பா? எப்படி இருக்கே?

மனது : என் கெட்ட செயலால் பெற்றோரையும் இழந்தேன். என் செல்வங்கள் எல்லாம் கடனால் அழிந்தது. என் பிள்ளைகளும் வளர்ந்து என்னை துரத்திவிட்டனர். என் மனைவியும் நோய்வாய்ப்பட்டு துன்பத்தில் இருக்கிறாள். எனக்கும் உடல் மிகவும் பாதித்து விட்டது.

மாயை : எல்லாம் சரியாகிவிடும். கவலைப்படாதே! மீண்டும் நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்.

மனது : மிகவும் அனல் கொண்ட கோபம் கொண்டு ஏ! மாயையே, உன்னை இந்த உலகத்தில் விட்டால் என்னைப் போல் பலரை நீ வீழ்த்திடுவாய். உன்னை என்னால் வீழ்த்திவிட முடியாது. அதனால் இறைவன் அருளால் நல்ல குரு ஒருவர் வந்திருக்கிறார். அவர் அனைத்தும் கற்று உணர்ந்தவர். அவரிடம் சென்று என்னையும் காப்பாற்றிக் கொண்டு உன்னையும் அழித்து விடுவேன்.

மாயை : பலபேர் இப்படித் தான் சொல்லி குரு என்று போய் ஒன்னுமில்லாமல் போயிருக்கிறார்கள் தெரியுமா? ஜாக்கிரதை என்றதாம்.

மனது : அந்த நல்ல குருவை சந்தித்ததாம். நடந்ததை எல்லாம் கூறியதாம். அழுது நான் இருப்பதைவிட இறப்பதே மேல் என்னைக் காத்து அருளுமாறு கண்ணீர் விட்டதாம். அப்பொழுது

குரு : மனதே கவலைபடாதே! உன் அந்தக் கரணத்திலே மாயை என்ற பேய் உன்னை ஆட்டிப்படைத்து அதன்வழி நீ சென்றாய். அது அரசனாயும் நீ சேவகனாயும் ஆகிப் போனாய். சொரூபத்தை புரியாமல் ஆசை என்னும் சாகரத்தில் சக்கரவர்த்தியாகி துன்பம் என்னும் ஊரில் அரசாண்டு இராஜ்ஜியத்தை இழந்து, இரண வேதனைப்பட்டு திருவருளால் குருவை நாடினாய். கவலையை விடப்பா!

மனது : சுவாமி! இப்படிப்பட்ட மனநிலையை ஆண்டவன் மனிதனுக்குப் படைக்காமல் இருந்து இருக்கலாம் இல்லையா சுவாமி?

குரு : அப்பனே! மனதே, நன்றாக ஒன்றை புரிந்துகொள். ஒன்று என்றால் அனைத்திற்கும் ஜீவமாக விளங்குவது எது என்றால், அது பரம்பொருள் ஒன்றுதான். அந்த பரம்பொருளை அடைவதற்கு எப்படிப் பார்த்தாலும் இரண்டு மார்க்கம் தேவை. இந்த இரண்டு மார்க்கம் இருந்தால்தான் இறை பரம் எது என்பதே உணர முடியும். உதாரணமாக இயற்கைக்கு இரண்டு. சூரியன், சந்திரன். இது இல்லை என்றால் உலக இயக்கம் எப்படி இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். எந்த ஒரு மானிடப் பிறப்புக்கும் தாய், தந்தை தேவை. ஆக, இருவரும் இணைந்தால்தான் நீ பிறப்பாய். இதையும் யோசியுங்கள். இதுபோல் முதலில் தோன்றுகின்ற எதுவாக இருந்தாலும் அதற்கு இரண்டு சக்திகள் இணைந்து செயல்பட வேண்டும். அதுபோல் மனிதப் பிறவியில், உயிருக்கு முக்கியமான ஜீவத்தைத் தருவது மூச்சுக் காற்றே ஆகும். இது இரண்டு சுழற்சியில் செயல்படுவதால் மனிதன் ஜீவிக்கின்றான். ஆகாரம் இல்லாமல் கூட மனிதன் 10 நாட்கள் இருப்பான். ஆனால் 10 நிமிடம் மூச்சை அடக்கினால் இறந்து விடுவான். அதுபோல் அவன் விடும் மூச்சு இரண்டு. இப்பொழுது மனிதனுக்கு 6 அறிவையும், 9 துவார சக்திகளையும், 6 ஆதாரங்களையும் இயக்குகின்றது எது தெரியுமா? பெரிய மூளையும் சின்ன மூளையும் தான். இவை இரண்டின் செயல்கள்தான் மனிதனின் இயக்கம். பெருமூளை அறிவை வெளிப்படுத்தும். சிறுமூளை அனைத்து செயல்களையும் வெளிப்

படுத்தும். இதில் சிறுமூளை செயல்படுத்துவதே மனதாகும். சிறிய மூளைக்கு 16 ஆதாரத் தத்துவம் உண்டு. பெருமூளைக்கு 8 'ஆதாரத்'துவம் தான் உண்டு. என்ன விந்தை பாருங்கள். செயல்பாடு செய்கின்றது 16 ஆகும். அறிவை போதிக்கின்றது 8 ஆகும். இப்பொழுது இதை ஏன் சொல்கின்றேன் என்பதைப் பாருங்கள் :

அதாவது பெருமூளையில் இருந்துவருகின்ற சுவாசம் மூச்சு, இடைகலை அதாவது சந்திர நாடி வழியாக 8 அங்குலம் கொண்டு வெளியில் வரும். வடகலை சுவாசம் (மூச்சு) 16 அங்குலத்தில் வெளிவரும். இந்த இரண்டு சுழற்சியில் சிறந்தது, இடகலையாகும். இப்பொழுது மனிதன் உடல் பலம், அறிவு பலம் நன்றாக இருக்க மூச்சுப் பயிற்சி செய்து பக்குவப்பட்டால் சுழிமுனை நாடி பலப்படும். இதை ஏன் சொல்லுகின்றேன் என்றால், தீயவற்றை போதிப்பது அதிகமாக இருக்கும். நல்லவற்றை போதிப்பது குறைவாக இருக்கும். இது ஆண்டவன் மனித படைப்புக்கு பேதம் பார்த்து வைக்கவில்லை. இடையில் மனிதனே பேதம் கொண்டு, கெட்ட போதனை ஏற்று சோதனைக்குள்ளாகி வேதனைப்படுகிறான். ஏன் என்றால் அவன் அறிவென்ற நிலையை சிந்திப்பதை விட்டு மனது என்ற கோட்டையில் வாசம் செய்வதால். அதனால் தான் துன்பப்படுகிறான். அதிகமாக இருப்பதன் மேல் தானே மனிதனுக்கு ஆசையும் அதிகம். குறைந்து வருவதை யாரும் விரும்பமாட்டான். இதில் பேதம் என்றால் அதிகம் உள்ளது நன்மையா, குறைந்து உள்ளதில் நன்மையா என்பதை யோசிக்கத் தெரியாது முடிவெடுப்பதே. இப்படித்தான் மனது செயல்பட்டு

நல்லதை விட்டு தீயவற்றை நாடி அதன்படி செயல்பட்டு அவஸ்தைப்படுகிறது. இப்பொழுது புரிகிறதா மனதே! என்றார் குரு.

மனது : சுவாமி, அப்பொழுது இந்த மாதிரி மனநிலை ஒரே நேரத்தில் மனிதர்கள் அனைவருக்கும் மாறி, ஒரு தூய்மையான வழி உலகத்தில் வராதா? அல்லது வருவதற்கு ஞானமார்க்கத்தில் வழிதான் என்ன சுவாமி?

குரு : அப்பனே மனது எவ்வளவு எளிமையாக கேட்டு விட்டாய்! ஒரு தென்னை மரத்தின் தோப்பைப் பார். அனைத்தும் ஒரே விதமான நல்ல பலனை நமக்குத் தருகிறது. எத்தனை ஆயிரம் மரங்கள் அந்தத் தோப்பில் இருந்தாலும் அத்தனையும் நமக்கு பலன் அளிக்கக்கூடியதாகவே இருக்கும். அதேபோன்று வாழைத் தோப்பு, அதேபோன்று அனைத்து பயிறு வகைகள்கூட. ஆனால் இவை பலனை நமக்கு தருவதற்கு காரணம் என்ன? பஞ்சபூதம், ஆக ஆயிரம் பலன் நமக்கு கிடைத்தாலும் அதை செயல்படுத்துவது ஐந்துதான் பார்த்தாயா. அதுபோல் இயற்கையை மனிதன் சிந்தித்தாலே அவன் மனது தூய்மைப்படும். ஆனால் அவன் சிந்தனையோ அந்த இயற்கையை அழித்துக் கொண்டு மாடமாளிகை, அற்புத வீடு, பெரிய தொழிற்சாலை என்று, கார், பங்களா என்று இயற்கையை அழித்துச் செயல்பட தொடங்கி விட்டான் இல்லையா. அங்கே பஞ்சபூதம் கொண்டு இயற்கை நமக்கு பல்வேறு அற்புத பலன்களைத் தருகிறது. ஆனால் மனிதனோ அதே பஞ்ச பூதத்தை வைத்து சுயநல வாழ்வு வாழ்கின்றான்.

ஒரு பூதம் நல்லதை செய்கிறது. இன்னொரு பூதம் அழித்து சுயநலம் கொண்டு துன்புற்றும், துன்புறுத்தியும் வாழ்கிறது. புரியவில்லையா? ஒரு பூதம் என்ற பஞ்சபூதம் காற்று, நீர், நெருப்பு, ஆகாயம், பூமி. இன்னொரு பூதம் என்பது காமம், குரோதம், லோபம், மோகம், மதமாச்சர்யம் என்பது ஆகும். இப்படிப்பட்ட மனித பூதம் மூன்றுவித புத்தியால் மனதை கெடுத்துக் கொள்கிறது. ஆணவம், கன்மம், மாயை என்று மூன்றைக் கொண்டு இது அறிவின் வெகு தூரத்தில் இருந்து குறி பார்த்து மனம் என்னும் விலங்கு மீது சரியாக தாக்குகிறது. அந்த விலங்குகள் ஏற்கனவே மூன்றுவித அற்புத சக்திகள் கொண்டதினால் அந்த அம்பை கையில் பிடித்து ஆனந்தக் கூத்தாடுகிறது. அது என்ன சக்தி? ரஜோகுணம், தாமஸகுணம், சாத்வீககுணம் என்ற சக்தி. இதுவும் அறிவுக்கு அப்பால் இருக்கிறது. இந்த சக்தியும், அந்த புக்தியும் மனிதனின் மிகப் பெரிய பலம் என்று அறிவை இழந்து விடுகின்றான். அது எப்படி தவறு என்பதை மனிதன் உணர்வான்? (அல்லது) யார் உணர்த்தப் போவது, அப்படி உணர்த்துவதை அவன் ஏற்றுக் கொள்வானா? ஏற்றுக் கொண்டு இருந்தால் உலகத்தில் சண்டை ஏது, சல்லாபம் ஏது, வீண்பழி ஏது, தீவிரவாதம் ஏது, கொலை ஏது, கொள்ளை ஏது, சலனம் ஏது, பொறாமை ஏது, இல்லாமை ஏது. இது போன்று இன்னும் எத்தனையோ சொல்லலாம். ஐயா! அப்பொழுது ஏதாவது ஒரு காலகட்டத்தில் சிறு நொடிப் பொழுதாவது மனிதன் அந்த அறிவின் வழி சிந்தித்தே தீருவான். அப்படி சிந்திக்க வைப்பது நல்ல ஞானியரின் சர்ச்சங்கம் ஆகும்.

மனது : இந்தக் காலத்தில் எல்லாம் சத்சங்கம் என்றாலே பலபேர் கேலி செய்து சிரிப்பார்கள். சில பேர் அந்தப் பக்கம் தலை வைத்துக் கூட படுக்கமாட்டார்கள். இன்னும் சிலபேர் அங்குதான் நிம்மதியாக தூங்குவார்கள். சில பேர் பரிகாசமும் செய்வார்கள். இந்த கலியுகத்தில் இப்படி இருக்க நீங்கள் சொல்வது எப்படி குருவே?

குரு : அப்பனே, ஒரு விதை பழுத்து தரையில் விழுந்தால் மீண்டும் தானாகவே முளைத்து, தான் மரமாகவோ, செடியாகவோ, கொடியாகவோ எதுவோ, அதுவாக உயிர்ப்பித்து வளரும். இது இயற்கைக்கு மட்டும் தான் பொருந்தும். வேறு எந்த ஒரு உயிர் இனத்திற்க்கும் இது பொருந்தாது. உயிரினங்கள் பழுத்து விழுந்தால் அது மரணம். மரணம், மரணமே. மீண்டும் அது உயிர்ப்பித்து வராது. அப்படி உயிர்ப்பிக்க முடியவும் முடியாது. ஒரு முறை பார்க்கின்ற மனிதர்கள் மரணம் அடைந்தால் மீண்டும் பார்க்க முடியாது. ஆனால் ஒரு தென்னை மரத்தில் பழுத்து விழுகின்ற தேங்காய் மண்ணில் புதைந்து தானாகவே மீண்டும் மரமாக முளைக்கும். ஆனால் மனிதனால் உயிரினங்களால் அப்படி முடியுமா. ஒரு முறை பிறந்து இறந்தால் அது பிணம். மறுமுறை பார்க்க முடியாத ஜடம். இதை யோசித்துப் பார்த்தால் ஒரு மரம், செடி, கொடிக்கு இருக்கும் அந்த பலத்தைகூட ஆண்டவன் நமக்குத் தரவில்லையே! என்ற சிந்தனை வந்துவிட்டால் கொஞ்சமாவது மாறுவான் என்பதனால்தான் உலக சிருஷ்டியையே இறைவன் புவனம் என்று வைத்தான். புவனம் என்பது உலகத்தைப் படைப்பதற்குக் காரணமாக இருந்தது. இதில் புவ என்றால் மண்டலங்களுடன்

மனிதன், வனம் என்றால் இயற்கை, காடுகளுடன் இணைந்த பஞ்சபூதம் என்றும் இறைவன் படைத்தான். மண்டலங்களில் மனிதன் வாழ்வு அறிவு ஆறு கொடுத்தாலும் அதனை தனக்காக உபயோகப்படுத்தி மரணம் என்ற நிலைக்குப் போகிறான். இயற்கைக்கு ஓர் அறிவே இருந்தாலும் அது மனிதனுக்கு நன்மைகள் செய்து மரணமில்லா பெருவாழ்வு வாழ்ந்து மீண்டும் மீண்டும் உயிர்ப்பித்து உன்னதமான சக்தியில் மனிதனை வாழ்விக்கிறது. இவை ஏன் தெரியுமா? ஆறு அறிவு படைத்தவனுக்கு இறைவன் மனது என்ற ஒன்றை கொடுத்தான். ஒரு அறிவு படைத்த இயற்கைக்கு மனது என்ற ஒன்று கிடையாது. அதனால் தான் அது ஒரே சிந்தனையோடு தன் நற்காரியங்களை செய்து கொண்டே இருக்கிறது.

மனது : அப்போ மனது என்று ஒன்று மனிதனுக்கு இருப்பது தவறு என்று சொல்கிறீர்களா குருவே?

குரு : அடே மனதே! ஒரு சிறுகதையை சொல்லுகிறேன் கேள். மனிதனுக்கும் இயற்கைக்கும் ஒரு போட்டி வைத்தாராம் பிரம்மா. மனிதனை கூப்பிட்டு உங்களுக்கு ஓர் விளையாட்டு சொல்லுகின்றேன். அதில் நீங்கள் வெற்றி பெற்றால் மீண்டும் உலக சிருஷ்டியில் அனைவரும் மரணம் இல்லாத பெருவாழ்வு வாழ்வீர்கள் என்றும், இயற்கை யினிடத்தில் பிரம்மா கூப்பிட்டு உங்களுக்கும் ஒரு விளையாட்டை சொல்லுகின்றேன். நீங்கள் ஜெயித்தால் மனிதனே இல்லாத ஒரு புது உலகம் உருவாக்கித் தருகிறேன் என்றாராம். இரண்டும் சரி என்று ஒப்புக் கொண்டன. மனிதர்களைப் பார்த்து நீங்கள் இயற்கையிடம் விளையாட வேண்டும்.